**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம்**
**இறுதிப் பரீட்சை 2006/2007 – முதலாம் கல்வித்தவணை**
**கல்வி உளவியல் - ESP1201**

**காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்**

---

திகதி : 11.03.2007 நேரம் : பி.ப 1.30 – பி.ப. 4.30

---

பகுதி I இல் எல்லா வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்கும் விடையளிக்க.

## பகுதி I

1. உமது வகுப்பில் மாணவர் நடத்தையை விளங்கிக்கொள்வதற்கு கல்வி உளவியல் பயனுள்ளது என்பதை உமது அனுபவத்திலிருந்து குறிப்பான இரண்டு உதாரணங்கள் தந்து சுருக்கமாக விளக்குக.

2. மாணவர் நடத்தையை ஆராய்வதற்கு ஆசிரியர் ஒருவருக்குப் பிரயோசனமான ஏதாவது ஒரு முறையைத் தெரிவுசெய்து வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டின் மேம்பாட்டிற்கு இதன் பயன்பாட்டை விளக்க இரண்டு உதாரணங்கள் தருக.

3. கற்றலில் மாணவர்களின் ஊக்கலை விளக்க மாஸ்லோவின் கொள்கையின் பொருத்தப்பாட்டை ஆராய்க.

4. பெரும்பாலும் பரம்பரைக் காரணிகளால் தீர்மானிக்கப்படும் தனியாள் ஒருவரின் மூன்று பண்புகளைப் பெயரிட்டு விளக்குக.

5. புருணரினால் அறிமுகப்படுத்தப்பட்ட விருத்தியின் மூன்று படிகளையும் பட்டியற்படுத்தி, பிள்ளை ஒன்று எவ்வாறு தனது அனுபவங்களை இப்படிகளில் ஏதாவது ஒன்று தொடர்பாகத் தனக்குப் பிரதிநிதிப்படுத்தும் என விளக்குக.

6. 'வளர்ச்சி', 'விருத்தி' ஆகிய இரு எண்ணக்கருக்களையும் பொருத்தமான வரைவிலக்கணங்கள் தந்து விளக்குக.

7. ஒருவரின் நடத்தையை அமைப்பதில் மீளவலியுறுத்தல் எவ்வாறு பயன்படுத்தப்பட முடியும் என்பதைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

8. தனது அனுபவங்களுக்கு அர்த்தங்களை அளிப்பதற்கு முன்பாகத் தனியாள் ஒருவரில் ஏற்படும் இரண்டு உளச் செயன்முறைகளைப் பெயரிட்டு சுருக்கமாக விளக்குக.

## பகுதி II

9. (i) வகுப்பறையில் மாணவர்களின் சிந்தனை (அறிதல்சார்) செயன்முறையை விளங்கிக்கொள்வதற்கு ஆசிரியர் ஒருவருக்கு உதவக்கூடிய கொள்கை ஒன்றை விளக்குக.

   (ii) இச்சிந்தனைச் செயன்முறையின் எவையேனும் இரண்டு படிகளைத் தெரிவுசெய்து அவ்விரண்டையும் இலகுபடுத்துவதற்குரிய ஆசிரியரின் வகிபாகத்தினை விளக்குக.

10. (i) பிள்ளை ஒன்றின் முதிர்ச்சிக்கும் கற்றலுக்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்புண்டு. இக்கருத்தைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

   (ii) பிள்ளையொன்றின் விருத்தியில் மூன்று வித்தியாசமான பகுதிகளைப் பெயரிட்டு, இவ் ஒவ்வொன்றினதும் திருப்திகரமான விருத்தி மற்றைய நிலைமைகளில் எவ்வாறு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் என ஆராய்க.

   (iii) பிள்ளை ஒன்றின் விருத்தியில் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் இரண்டு சூழற் காரணிகளை எடுத்துக்காட்டி பிள்ளையின் விருத்தியில் அவற்றின் தாக்கத்தினை விளக்குக.

11. பிள்ளைப்பருவம் **அல்லது** கட்டிளமைப்பருவத்தினைத் தெரிவுசெய்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

   (i) தனியாள் ஒருவரில் அறிதல்சார், சமூக நடத்தைகளில் ஏற்படக்கூடிய முக்கிய மாற்றங்களை (ஒவ்வொன்றிலும் மூன்று வீதம்) ஆராய்க.

   (ii) மேற்கூறிய ஒவ்வொரு நடத்தை நிலைமையிலிருந்தும் (அறிதல்சார், சமூக) ஒவ்வொரு மாற்றத்தினைத் தெரிந்து, இம்மாற்றங்களை எளிமைப்படுத்த ஆசிரியரின் வகிபங்கை விளக்குக.

   (iii) உமது பாடசாலையில் மேற்படி வகிபங்கை ஓர் ஆசிரியர் என்ற வகையில் நீர் ஆற்றும்போது எதிர்நோக்கக்கூடிய பிரச்சினைகளை (மூன்றை) ஆராய்க.

12. பின்வருவனவற்றில் **மூன்றிற்கு** சிறுகுறிப்புக்கள் எழுதுக.

   (i) தூலசிந்தனைப் பருவத்தின் வரையறைகள்.

   (ii) பிள்ளையின் நடத்தையை ஆராய்வதற்குப் பரிசோதனை முறைகளின் பயன்பாடு.

   (iii) கற்றல் இடமாற்றத்தை எளிமைப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய நுட்பங்கள்.

   (iv) பிள்ளையொன்றின் ஆளுமை விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.

   (v) பிள்ளைகளின் மனவெழுச்சி விருத்தியில் ஆசிரியர்களின் வகிபங்கு.

13. (i) நீர் தெரிவுசெய்த எவையேனும் இரண்டு கொள்கைகளைப் பயன்படுத்தி கற்றலை விளக்குக.

(ii) நீர் தெரிவுசெய்த கொள்கைகளின் ஒற்றுமை வேற்றுமைகளைப் பின்வரும் தலைப்புக்களில் ஆராய்க.

(அ) சூழலுக்கும் தனியாளுக்கும் கொடுக்கப்பட்டுள்ள முக்கியத்துவம்

(ஆ) கற்றலை வலுப்படுத்தப் பயன்படுத்தக்கூடிய உபாயங்கள்

(இ) ஆசிரியர், மாணவர்களின் செயற்பாடுகள்

14. (i) பொருத்தமான வரைவிலக்கணம் ஒன்றைப் பயன்படுத்தி ஆளுமையை விளக்குக.

(ii) மூன்று ஆளுமைக் கூறுகளின் செயற்பாட்டினால் ஆளுமை வேறுபாடுகள் ஏற்படுவதாக பிராய்ட் குறிப்பிடுகின்றார்.

(அ) இவ் ஆளுமைக் கூறுகளைப் பெயரிட்டு, அவற்றின் முக்கிய செயற்பாடுகளை விளக்குக.

(ஆ) இம்மூன்று ஆளுமைக் கூறுகளுக்கிடையிலான இடைத் தாக்கத்தினைப் பகுப்பாய்வு செய்க.

(இ) இம்மூன்று ஆளுமைக் கூறுகளின் செயற்பாடுகள் எவ்வாறு ஆளுமை வேறுபாடுகளுக்கு இட்டுச் செல்கின்றன என்பதைப் பொருத்தமான உதாரணங்கள் தந்து விளக்குக.

- பதிப்புரிமை உடையது -